முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1685

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.05.2024**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்கார தவசியே தேசிகா
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உந்தனுக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் குரோதி தகர் திங்களில்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 27 ம் நாள், 10.05.2024, வெள்ளிக்கிழமை)
அரங்கனுக்கு சக்தி பெருக உரைப்பேன்
வாசி வென்ற ஞானியர்களெல்லாம்
வலம் வந்து அரங்கனுக்கு துணையாய் நிற்க
3. நிற்கவே அரங்கன் தேர்வு செய்யும்
நிலவுலக மாந்தர்களே வரும்காலம்
ஆற்றல் பெருகி இனிதே அரங்கன் தேடுகின்ற
ஆக்கம் மிக்க ஞான உலக மாற்றத்தில்
4. மாற்றத்தில் இனிதே பங்கு கொண்டு
மனிதர்கள் ஆட்சி முடிவுக்கு வரும் வண்ணம்
ஆற்றல்பட ஞான ஆட்சி தனை
ஆறுமுகன் என் தலைமை கொண்ட வண்ணம் இனிதே
5. இனிதே வருமுலகில் மாற்றம் செய்ய
வல்லமைபட அரங்கன் வழி யானே அருள் செய்வேன்
செய்யவே உலக மாந்தர்களெல்லாம்
செப்பிடுவேன் அரங்கன் தொடர்பு கூட்டி
6. ஐயமற ஞான வழிக்கு வர
அரங்கன் அன்னதான சேவை வழி
அனைவரும் பங்கு கொண்டு
பொருள் உதவி செய்து

7. செய்துமே அரங்கன் தர்மம் வளர்க்க
பேருலகமெல்லாம் தர்ம பலம் கூடி
வருமுலகம் அரங்கன் தொண்டர்படை வழி
வல்லமைமிக்க தர்மலோகமாக

8. ஞான பலமிக்க ஆட்சிகாலம் கொண்ட
ஞானிகள் வெளிப்படும் வண்ணம் அற்புதம் நிகழ்ந்து
உருவாகும் இனிதே உலகமாற்றம்
உயர் ஞானி அரங்கன் அவதாரத்தால்

9. பெருமைபட அரங்கன் நாமஜெபம் சொல்லி
பிசகின்றி உலகோர் ஞானம் பயில
முருகப்பெருமான் என் ஆசி தயவு கிட்டுவதோடு
முழுமை ஞானம் கண்டு அவர்களெல்லாம் ஞானிகளாகக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–